[2017 மார்ச் 21

60—

போக்குவரத்துப் பணிமனை

***8421—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கடவூர் ஒன்றியமானது சுமார் 94,420 மக்கள்தொகை கொண்ட ஒன்றியமாக இருப்பதாலும், மாவட்டத்தில் உள்ளே மிக முக்கியமான பகுதிகளில் இருந்தும், மாவட்டத்தை ஒட்டியுள்ள மிக முக்கியமான பகுதிகளில் இருந்தும், அதிகப்படியான பேருந்துகள் வந்து சென்று கொண்டிருக்கும் ஒரு மையப் பகுதியாக கடவூர் ஒன்றியம், தரகம்பட்டி இருப்பதன் காரணத்தாலும், கடவூர் மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக அரசுப் பணிமனை அமைக்கவேண்டிய கோரிக்கையாக இருந்து வந்துள்ளது. ஒரு பணிமனை 40 கி.மீ. தூரத்தில் அமைக்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனது தொகுதிக்குட்பட்ட கருப்பம்பாளையம் என்ற கிராமத்தில் அரசுப்*

2017 மார்ச் 21]

பணிமனை உள்ளது. அங்கிருந்து தரகம்பட்டி 44 கி.மீ. தூரத்தில் உள்ளது. குளித்தலை 45 கி.மீ. தொலைவிலும், மணப்பாறை 45 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இந்த ஊருக்கு இடையில் அரசுப் பணிமனை ஏதும் இல்லை. எனவே, தரகம்பட்டியில் பணிமனை அமைத்திடவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள தரகம்பட்டியில் புதிய பணிமனை அமைக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார். ஆனால், தரகம்பட்டியிலிருந்து 17.6 கி.மீ. தொலைவில் உள்ள பாளையம் என்னும் இடத்தில் சர்வே எண் 92/1–ல் ஏக்கர் 0.93 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

முற்பகல் 11–05

மேலும், புதிய பணிமனை அமைக்க வேண்டுமானால், இரண்டு பணிமனைகளுக்கிடையே குறைந்த அளவிலான தூரம் 40 கிலோ மீட்டராவது இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதால், தரகம்பட்டியில் புதிய பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

திருமதி ம. கீதா: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருங்கல் பகுதியிலிருந்து கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பேருந்துகள் அந்தப் பகுதியைக் கடந்து செல்கின்றன.*

[2017 மார்ச் 21

கருங்கல் பேருந்து நிலையம், தொலையாவட்டை பேருந்து நிலையம், புதுக்கடை பேருந்து நிலையம், கொல்லங்கோடு பேருந்து நிலையம் என அந்தப் பகுதியில் நான்கு பேருந்து நிலையங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கின்ற பேருந்து நிலையங்களில், அவற்றிற்குப் பக்கத்தில் உள்ள கிராமங்களில் எல்லாம் இரவு நேரம் stay bus-கள் அதிகமாக நிற்கின்றன. கருங்கல் பேரூராட்சிக்குட்பட்ட மங்கலகுன்று பகுதியில் மூன்று ஏக்கருக்கு அதிகமாக நிலம் உள்ளது. அதில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தந்தால் உதவியாக இருக்கும். இதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 2011–2016 வரையிலான ஆட்சிக் காலங்களில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 74 புதிய பணிமனைகள் அமைக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையிலே 36 பணிமனைகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே திறக்கப்பட்டிருக்கின்றன. அதன்பிறகு, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 5 புதிய பணிமனைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள பணிமனைகளுக்குண்டான நிலத்தினை கையகப்படுத்துகின்ற பணிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தை ஆய்வு செய்து, அங்கு பணிமனை அமைக்க தேவை இருக்குமாயின், அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]